**KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.**
**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

## முதல் இடைத்தேர்வு – 2024

## தமிழ்

வகுப்பு : ஒன்பது | பெயர் : ………………...

காலம் : 1.30 மணி | மொத்த மதிப்பெண் : 50

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x1=7

1. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் ………

அ. முரண், எதுகை, இரட்டைத்தொடை  ஆ. இயைபு, அளபெடை, செந்தொடை
இ. மோனை, எதுகை, இயைபு  ஈ. மோனை, முரண், அந்தாதி

2. சிற்றிலக்கியங்கள் ……….. வகைப்படும்.

அ. தொண்ணூற்று ஆறு  ஆ. நூற்று மூன்று
இ. பதினெட்டு  ஈ. நாற்பது

3. "மிசை" என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ. கீழே  ஆ. மேலே  இ. இசை  ஈ. வசை

4. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக …………..

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் …………..

அ. வந்தான், வருகிறான்  ஆ. வந்துவிட்டான், வரவில்லை
இ. வந்தான், வருவான்  ஈ. வருவான், வரமாட்டான்

5. பொருந்தாத இணை எது?

அ. ஏறுகோள் - எருதுகட்டி  ஆ. திருவாரூர் - கரிக்கையூர்
இ. ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு  ஈ. பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

6. தீரா இடும்பை தருவது எது?

அ. ஆராயாமை, ஐயப்படுதல்  ஆ. குணம், குற்றம்
இ. பெருமை, சிறுமை  ஈ. நாடாமை, பேணாமை

7. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

அ. நான்கு  ஆ. மூன்று  இ. இரண்டு  ஈ. எட்டு

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x2=6

**(12 வது வினா கட்டாய வினா)**

8. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

9. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ. இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு.

ஆ. சொற்றொடர் எழுவதற்குக் காரணமான பெயர்ச்சொல்லை எழுவாய் என்கிறோம்.

10. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. நீங்கள் வாழும் நிலப்பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
12. "எனைத்தானும்......" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

III. **எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x2=6

13. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

    அ. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ................ (செல்).

    ஆ. தவறுகளைத் ............. (திருத்து).

14. **கலைச்சொல் தருக.**

    அ. Conical stone ஆ. Excavation

15. **அகராதியில் பொருள் காண்க.**

    அ. நயவாமை ஆ. நெடில்

16. பகுபத உறுப்பிலக்கணம் தருக. விரித்த
17. **பிழைநீக்கி எழுதுக.**

    அ. சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.

    ஆ. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6

**(20 வது வினா கட்டாய வினா)**

18. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
19. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
20. "காடெல்லாம்" – எனத்தொடங்கும் பெரியபுராணப்பாடலை அடிமாறாமல் எழுதுக.

V. **எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6

21. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
22. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.
23. கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.

    அ. வேண்டும் ஆ. பார் இ. வா

VI. **எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 3x4=12

24. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.
25. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26. நீங்கள் பாராட்டுப்பெற்ற சூழல்கள் ஐந்தினை எழுதுக.

    சான்று : கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்த போது.

27. **மொழிபெயர்க்க.**

    அ. Linguistics – ஆ. Literature –

    இ. Philologist – ஈ. Polyglot –

VII. **விரிவான விடையளிக்கவும்.** 1x7=7

28. அ. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. (அல்லது)

    ஆ. நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

www.Padasalai.Net

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com